2018 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அதெல்லாம் முடிவில்லாமல் நீண்டுகொண்டே போகும். விவாதம் இல்லை. (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, நீங்கள் சத்தமாகப் பேசினாலும் என்னுடைய அனுமதி இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மிகவும் சத்தமாகப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, அதெல்லாம் பதிவாகாது. நீங்கள் பேசுவது ரெக்கார்டு ஆகாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் மறந்து, தமிழகத்தின் நலம் ஒன்றையே தன் வாழ்வெல்லாம் நினைத்து, "எனக்காக எதுவும் இல்லை, எல்லாம் என் மக்களுக்கே" எனப் பணியாற்றி, 10 கோடி தமிழர்களின் இதயமெல்லாம் நிறைந்து, மண்ணை விட்டு மறைந்தாலும், எங்கள் கண்களை விட்டு அகலா காவியமே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசியலை தென்னாட்டுப் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த திராவிடத்து ஒளிவிளக்கே! "தமிழக மக்கள் யாரிடத்திலும் எதற்காகவும் கையேந்திடாத காலத்தை உருவாக்குவேன்" என்று தமது ஆயுட்கால இலட்சியத்தை நமக்கெல்லாம் கட்டளையாக இட்டுவிட்டு, வங்கக் கடலோரம் நீங்கா துயில்கொள்ளும் எங்களின் தங்கத் தாரகையே! சாதாரண தொண்டர்களையும் இந்தச் சட்டமன்றத்தில் அமர வைத்து அழகு பார்த்த அன்னபூரணி இதய தெய்வம் அம்மாவை வணங்குகிறேன். பொன்மனச் செம்மல், பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்

[திரு. விருகை V.N. ரவி] [2018 மார்ச் 21

நூற்றாண்டு விழா நடத்தி, தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்த்து, அம்மாவின் நல்லாட்சி நடத்திவரும் தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பணிவின் உறைவிடமாய் இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நீதி தவறாத நடுநிலையோடு நடந்துவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 35 முதல் 62 வரையிலான 28 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். மேற்படி அறிக்கைகளை அச்சிட போதிய அவகாசம் இன்மையால், அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை, பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. சி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை சிறப்பாக நடத்திவரும் உழவராய் பிறந்து முதல்வராய் உயர்ந்த குடிமராமத்து மன்னன், எங்களது அண்ணன், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது முதல் பத்தாவது வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி.